மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# இரணியனின் ஆணவமும் பிரகலாதனின் பக்தியும்

**சே.கவிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

**முன்னுரை**

கம்பன் படைத்துள்ள எண்ணற்ற பாத்திரங்களில் பரம்பொருளாகிய திருமாலின் பக்தி நெறியை வெளிப்படுத்திக் காட்டும் நோக்கில் அமைந்த பிரகலாதன் வைணவ நெறியை ஏற்றுக்கொண்டு நடக்கின்றவனும், ஆணவத்தின் உச்சகட்டமாகிய இரணியனும் எதிரெ எதிர் சிந்தனை உடையவர்களாக காட்டப்பட்டுள்ளனர். ஆணவச் செருக்கால் இறைவனை வந்திப்பதற்கு தயாராகும் இரணியனின் செயலும், எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்து என்றென்றும் தன்னை இறைவனை அடைக்கலப்படுத்திக் கொண்டிருக்கும் பிரகலாதனின் செயலும் இக்கட்டுரையில் விளக்கம் பெற்றுள்ளன.

**கதைச் சுருக்கம்**

பிரமனுடைய புதல்வன் மரீசி பிரஜாபதி. அவன் மகன் காசியப முனிவர். அம்முனிவரின் மனைவி திதி என்பவளிடம் பிறந்தவன் இரணியன். இரணியன் என்ற சொல்லுக்குப் பொன்னிறமானவன் என்பது பொருளாகும். பிரமனே இரணியனுக்குக் குருவாக இருந்தான். வேதப் பொருளைக்

கற்பித்தான். பின்னர் இரணியன் பெருந்தவம் புரிந்து பிரமனிடம் தேவர், மனிதர், ஐம்பெரும் பூதங்களாலும், ஆயுதங்களாலும், தனக்கு மரணம் கூடாது என வேண்டி வரம் பெற்றான். அது முதல் எல்லாத் தேவர்களும் அவன் கட்டளைக்கு அஞ்சித் தாம் செய்யும் காரியங்களின்வழி அவனை நினைத்து "இரணியாய நம" என்ற அவன் பெயரையே சொல்லி வந்தார்கள். இத்தகைய இரணியனுக்கு அறிஞனும் தூய்மையானவனும் அறம் மிகுந்தவனும் ஆகிய ஒரு புதல்வன் பிறந்தான். இரணியன் அவனுக்குப் பிரகலாதன் என்று பெயரிட்டான். அவனுக்குக் கல்வி கற்கும் பருவம் வந்தது. ஆதலால் இரணியன் தமது குலகுருவான சுக்கிராச்சாரியாரின் மைந்தனான சண்டமார்க்கன் என்பவனை அழைத்துத் தன் மகனுக்குச் சாஸ்திரப் பயிற்சி செய்விக்கும்படிக் கூறினான். அவன் பிரகலாதனை அழைத்து வந்து முறையாக அவனுக்கு வேதம் ஓதுவிக்கத் தொடங்கினான். வேதம் ஓதும்பொழுது தொடக்கத்தில் அக்காலத்தில் எல்லாரும் கூறிவருவது போல ஆசிரியன் பிரகலாதனை அவன் பிதாவின் பெயரான "இரணியாய நம" என்று உச்சரிக்கும்படிக் கூறினான். பிரகலாதன் முன்னரே நாராயணருடைய உண்மை வடிவத்தை உணர்ந்து இருந்தவன். ஆதலின் இச்சொல்லைக் கேட்டதும் தனது காதுகளைப் பொத்திக்கொண்டு பிரகலாதன், "நாராயணயாய நம" என்றான். ஆசிரியர் பிரகலாதனிடம் இப்படி நீ மறுதலித்தால் உனக்கும் எனக்கும் துன்பம் வரும் என்று மன்றாடினார். அதனை ஏற்க மறுத்த பிரகலாதன், "ஆதி நாயகன் பெயரன்றிப் பிறிதொன்றை ஓத வேண்டுவதில்லை" என்று கூறினான்.

நடந்தவற்றை எல்லாம் குருவானவர் இரணியனிடம் கூறினார். இரணியன் கோபம்கொண்டு பிரகலாதனை அழைத்து நீ சொல்லியது தவறு என்று அறிவுரை கூறினான். அதைக் கேட்ட பிரகலாதன் உலக உயிர்கள் அனைத்தையும் காக்கும் நாராயணன் நாமத்தை மட்டுமே என் நாவில் உச்சரிப்பேன் மற்றது ஏதும் என்னால் கூற முடியாது என்று ஆணித்தரமாகக் கூறினான். இரணியனுக்கு நாராயணன் நாமத்தைப் பற்றி விரிவாகவும் உபசரித்தான். அதைக்கேட்டு வெகுண்ட இரணியன் பிரகலாதனை அனலிடைத் தள்ளவும், யானையைக் கொண்டு இடறவும், கல்லொடு பிணைத்துக் கடலில் இடவும் பணித்தான். அவையெல்லாம் பிரகலாதனை ஒன்றுஞ் செய்யவில்லை. இறுதியாக நானே அவனைக் கொல்லுவேன் என்று இரணியன் வந்தான். "என்னுயிர் இறைவனுக்குக் காணிக்கை அதனை உன்னால் எடுத்துக்கொள்ள முடியாது" என்றான் பிரகலாதன். "அப்போது உன்னுடைய இறைவன் எங்கே இருக்கிறான்? காட்டு" என்றான் இரணியன். "அணுவுக்குள் அணுவாக எங்கும் பரந்து இருக்கிறான்" என்றான் பிரகலாதன். "அவ்வாறு எனில் இங்கு உள்ள தூணில் இருக்கிறானா?" என வினவிய இரணியனுக்கு "அங்கும் உள்ளான்" என்றான். இரணியன் அந்தத் தூணைக் கதையால் அறைந்தான். அதிலிருந்து நரசிங்கன் அகோரச் சிரிப்புடன் வெளிவந்தான். இரணியனைத் தன் மடியில் தூக்கி உடலை இரண்டாகப் பிளந்து உயிரை உண்டான்.

**சிந்தை தளராத பிரகலாதன்**

வால்மீகியில் இரணியன் கதை சொல்லப்படவில்லை. இக்கதையைப் பாகவதத்தில் பயின்ற கம்பர் தனது காப்பியத்தில் பொருத்தமான இடத்தில் கொண்டுவந்து

அமைக்கின்றார். இக்கதையைக் கம்பன் கொண்டு வருவதற்கு முக்கியமான காரணமாக இருப்பது "கொடுமையின் வீழ்ச்சியைக் கொண்டாடுவதே" ஆகும்.

நரசிங்கப்பெருமாள், பிரகலாதனை நோக்கி உன் தந்தையை உன் முன்னிலையில் எனது கைந்நகங்களாலே உடம்பைப் பிளந்து சிதைத்து நான் கொல்லவும் நீ மனம் தளராமல் இருந்தாய், அதனால் நீ அறந்தவறாத செயலை உடையை ஆவாய், இந்த அறத்தின் காரணமாக நீ என் மீது எல்லையில்லாத அன்பை வைத்தாய். ஆகவே நீ என்னாலே அருளத்தக்கவன் ஆயினாய். உன் குலத்தில் பிறந்த அசுரர்கள் இனி எல்லையில்லாத குற்றங்களைச் செய்தனராயினும் அவர்களை யாம் கொல்லமாட்டோம். உனக்கு எப்பிறப்பினும் யாம் நல்லவராக இருப்போம் என்றுரைத்த செய்தியை,

"உந்தையை யுன்முன் கொன்றுடலைப் பிளந்தளையச்
சிந்தை தளரா தறம்பிழையாகச் செய்கையாய்
அந்தமிலா அன்பென்மேல் வைத்தா யளியத்தாய்
எந்தை யினிஇதற்குக் கைம்மா றியாதென்றாள்" (யுத்த காண்டம், பா.166)

என்ற பாடலின் மூலம் உரைப்பதைக்கொண்டு தந்தையைக் கொல்லும்போது சிந்தை தளராது இருந்த பிரகலாதனின் செய்கையானது வெளிப்படுகிறது.

இரணியன் வீழ்ந்தபோது யாரும் அழுவதாகக் கம்பன் சொல்லவில்லை. மாறாகத் தந்தை இறந்த போது பிரகலாதன், சிந்தை தளராமல் நான்முகனைத் தியானித்துக் கொண்டிருந்தான் என்று கம்பன் பாடுகிறான். இரணியன் வதைப்படலம் பற்றி தெ.பொ.மீ, "தவ வலிமை புயவலிமை போன்ற திறங்களாலும் வீறிப் பெருகிய ஆணவத்திற்கு இராவணனை இரணியனோடு வைத்துப் போற்றத்தக்கது" என்று குறிப்பிடுகின்றார். (தெ.பொ.மீ., கம்பனின் கிளைக்கதைகள், ப.191)

உலகில் ஆணவத்தால் இறந்தவன் இராவணன் மட்டுமல்ல மேலும் பலர் உள்ளனர். அவர்களிலே ஆணவத்தின் உச்சியில் சென்றவன் இரணியன். அவனது கொடுமை கம்பரின் மனத்தைப் பெரிதும் பாதித்த காரணத்தால் அதைத் தனது காப்பியத்திற்குள் கிளைக்கதையாகக் கொண்டுவந்து வைக்கிறார். சிறியதோ, பெரியதோ கிளைக்கதை கூறுவது காப்பிய இலக்கணங்களுள் ஒன்று. தங்க அணிகலன் செய்யும் பொற்கொல்லன் வயிரத்தைப் பதிக்கும்போது கரிய பின்னணி ஒன்றை வைத்து அதிலே வயிரத்தை அழுத்துகிறான். பின்புலம் என்பது முக்கியக் கருத்தோட்டத்தினை வலுவாக்குவதற்காகவே ஆகும். இராவணன் வதை என்ற கதையின் முக்கியக் கருவுக்கு மேலும் ஒளியூட்டிடவே இரணியனைக் கொண்டு வருகிறான் கம்பன். இதனாலேயே வ.வே.சு.ஐயர் இக்கிளைக் கதையை "உபாக்கியான ரத்தினம்" என்று குறிப்பிடுகின்றார்.

**இரணியன் தனித்தன்மை**

பேராற்றல் நிறைந்த இரணியனைக் கம்பர் சுவைபட விளக்குகின்றார். உறையினின்று வயிர வாளை வாங்கி, வலக்கரத்தில் தாங்கி, வானகம் மறைக்கும் வட்டச் செயிரறு இடுக்கைப் பற்றி வானவர் உள்ளம் தீய, நுண்மணல் பரந்த ஏழு கடல்களும் எட்டுக்

குலமலைகளும் சிதற ஆர்த்து அங்கு உயிருள்ள மேரு மலை போல மடித்து உருத்து நின்றான் என்று கம்பர் இரணியன் பேராற்றலை விளக்குகின்றார்.

பிரம்மாவினால் அரிய பல வரங்களைப் பெற்றவன். வேதம் முதலிய கலைஞானங்களை நன்கு தெரிந்தவன். பஞ்ச பூதங்களிலும் மிஞ்சிய வலியினன். அகில அண்ட கோடிகளையும் உரிமையாக உடையவன். அதிசய நிலையினன். இத்தகைய பெருமைக்குரிய இரணியனைக் கம்பர்,

"வேதங் கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனே யீந்தான்
போதங் கண்ணிய வரமெலாந் தரங்கொண்டு போந்தான்
காதுங் கண்ணுதல் மாலயன் கடைமுறை காணாப்
பூதங் கண்ணிய வலியெலா மொருதனி பொறுத்தான்"

(கம்ப. யுத்த கா.பா.131)

என்ற பாடலின் மூலம் சுவைபட இரணியனின் பெருமையைப் பாடுகின்றார். அத்தகைய பெருமித நிலையில் பெருகியிருந்த அவன் உருவழிந்து, இருந்த இடமும் தடந்தெரியாமல் அழிந்து போனான். அந்த அழிவு அவனுடைய அநீதியால் நேர்ந்தது. தருமநீதி தவறின் யாவராயினும் அவன் அடியோடு அழிந்தே போவார். இந்த உண்மையைத் தெளிந்து உத்தம நெறியில் சித்தம் திருந்தி, வாழ வேண்டும் என்ற உண்மையைக் கம்பர் இரணிய வதைப்படலம் மூலம் உணர்த்துகிறார்.

செல்வம், கல்வி, அறிவு, ஆற்றல், வீரம் முதலிய நிலைகளில் இராவணனைவிட இரணியன் எவ்வளவோ உயர்ந்தவன். ஆனால் அவன் தேவகோபத்தால் அடியோடு அழிந்து ஒழிந்தான். தேவர் முனிவர் முதலிய யாருடைய சாபமும் அவனிடம் செல்லாது என்ற மமதை இருந்தது. தபசிகள் கோபித்துச் சபித்தால் அந்தச் சாபம் எவரையும் விரைந்து அழித்துவிடும் என்று வள்ளுவர் இக்குறளின் மூலம் கூறுகிறார்.

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து" (குறள், 898)

என்று அரிய மாதவருடைய பெரிய மகிமையை விளக்குகிறது. அருந்தவர் வருந்தி நினைத்தால், சிறந்த திருவோடு உயர்ந்துள்ள அரசனும் அடியோடு அழிந்து போவான் என்றமையால் அவரது அற்புத நிலை அறிய முடிகிறது. இத்தகைய மாதவர் சாபமும், இரணியனிடம் நெருங்காது என்பர். ஆனால் எங்கும் சார்ந்து தன் ஆற்றலை ஆற்றிவரும் அருந்தவர் சாபமும் இங்கே இவன்பால் ஏற்றமிழந்து இழிந்துபடும் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

கடவுள் எங்கே? காணமுடியுமா? என்ற ஆணவத்தால் தூணை அறைந்ததும், தூணில் இருந்து நரசிங்க மூர்த்தி தோன்றினான். அப்படி தோன்றிய நரசிங்கமூர்த்தியைப் பார்த்து வணங்காமல், வணங்காக் கழுத்துடையவனாக இருக்கின்றானே என்று கம்பர் பல இடங்களில் இரணியனின் ஆணவத்தைச் சுட்டிக் காட்டுகிறார். இறைவனை வணங்கினால்தான் உய்வு கிடைக்கும் என்று பிரகலாதன் உரைத்தும் மதி கெட்டவனாகவே வாழ்ந்து வந்தான்.

**தொகுப்புரை**

இறைவனைக் கைதொழுவர் என்றென்றும் ஏற்றத்தையே அடைவார்கள். இன்பத்தையும், துன்பத்தையும் அதற்கான காரணங்களில் இருந்தும், துன்பங்களில் இருந்தும், விடுபடுதலையும் இறைவனே அருளுகின்றான் என்ற நம்பிக்கையில் சரணாகதி அடையும்போது இறைவனின் திருக்கரங்களால் காக்கப்படுவோம் என்ற உயர்ந்த சரணாகதி தத்துவத்தைப் பிரகலாதனின் வாழ்வியலில் இருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது. அதே சமயம் இறைவனின் அருட்பெருந்தன்மையை அறியாமல் தானெனும் அகத்தை, இருளில் சிக்குண்டு துயரக்கடலில் வீழ்வோர் இறைநெறிக்கு எதிரான செயல்பாடுகளைச் செய்வர் என்ற அறிவுறுத்தலை இரணியனின் பாத்திரத்தின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆகவே சரணாகதி தத்துவம் உலக உயிர்களை உய்விக்கும் உயர்நெறி என்பதை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**


- வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியர் (உ-ஆ) கம்பராமாயணம், யுத்தகாண்டம். உமா பதிப்பகம்,சென்னை.
- அ.அ.ஞானசுந்தரத்தரசு, உளவியல் நோக்கில் கம்பனின் கிளைக்கதைகள், தமிழ்ச்சோலைப் பதிப்பகம், புதுக்கோட்டை.